**World Tamil Christian Fellowship**
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
www.wcflondon.com
wcflondon@gmail.com

# இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

## பாடம் 10

## உபத்திரவம் (Tribulation) – 04 –

## இறுதி காலத்தின் அடையாளங்கள்

நாம் ஒரு கணம் இரண்டாம் வருகையை குறித்த பாடத்தை மறு ஆய்வு செய்யலாம்.

- கர்த்தர் ஆபிரகாமை அழைத்து அவருடைய சந்ததியின் மூலம் ஒரு தேசத்தை உருவாக்கினார்.
- இஸ்ரவேல் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடு!
- தேவன் மக்கள் தன்னை பின்பற்ற வேண்டும் என்பதற்காக மோசேவுடன் உடன்படிக்கை ஒன்றை செய்தார். மேலும் அவர்களை அடிமைத்தனத்தில் இருந்து விடுவித்து வாக்கு பண்ணப்பட்ட தேசத்திற்கு அவர்களை அழைத்து வந்து நட்டார்.
- மக்கள் கர்த்தராகிய தேவனை விட்டு பின் திரும்பினர்.
- தேவன் தாவீது இராஜாவுடன் செய்திருந்த உடன்படிக்கையின் படி அவருடைய வம்சத்தைக்

கொண்டு தானே அவர்களை நித்தியத்திற்கும் ஆட்சி செய்யப்போவதாக வாக்கு செய்தார்.

- மக்கள் கர்த்தராகிய தேவனை விட்டு பின் திரும்பினர்.
- தேவன் மீண்டும் ஒருமுறை அவர்களை சிறைபிடிப்புக்குள் வழிநடத்தி பின்னர் **அவர்** அவர்களை திரும்ப கொண்டு வந்தார்.
- மீண்டும் அவர்கள் தேவனைப் பின்பற்ற தவறினார்கள்.
- இதுவரை தேவன் தன்னுடைய தீர்க்கதரிசிகளையும் தூதர்களையும் அனுப்பினார். இறுதியாக இப்போது தன்னுடைய நேச குமாரனாகிய இயேசுவை அனுப்ப முடிவு செய்தார்.
- அவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும் அவர்கள் நியாயத்தீர்ப்பை எதிர்கொள்ளப்போவதாக அவர் அவர்களிடம் கூறினார்.

கர்த்தராகிய இயேசு மத்தேயு 23 & 24 இல் என்ன கூறியுள்ளார் என்பதை தான் நாம் இங்கு படிக்கப்போகிறோம்.

மதத் தலைவர்களுக்கு எதிராக மட்டுமே இயேசு கிறிஸ்து கடுமையாக பேசியுள்ளார். இந்த முழு அதிகாரத்திலும் இயேசு அவர்கள் மீது சாபங்களை உச்சரித்துள்ளார். மிகவும் முக்கியமானவைகள் ஆகும்.

இயேசு இஸ்ரவேலின் பொய்யான ஆவிக்குரிய மதத் தலைவர்களாகிய பரிசேயருக்கும் வேத பாரகருக்கும் எதிராக சமரசமாய் இல்லாமல் கண்டனம் செய்தார். அவர்கள் யூத மதத்தில் ஆதிக்கம் செலுத்தும் வல்லமையும் செல்வாக்கையும்

*கொண்டிருந்தனர். இயேசு தன்னுடைய முதல் பிரசங்கமாகிய, மலைப் பிரசங்கத்திலும் (மத்தேயு 5:20; 7:15) தன்னுடைய இறுதி பிரசங்கத்திலும் (மத்தேயு 23) அவர்களைக் குறித்து எச்சரித்துள்ளார்.*

*முந்தைய நாளை நினைவில் கொள்ளுங்கள், இயேசு கோவிலுக்குள் பணத்தை மாற்றுபவர்களை துரத்திச் சென்று வெளியே எறிந்தார். அதற்கு அடுத்த நாள் அவர்களுடன் பகிரங்கமாக பொது இடத்தில் பேசினார்.*

*இயேசு அவர்களை அழைக்க பயன்படுத்திய பெயர்களாவன,*

- *நரகத்தின் குமாரர்கள்,*
- *குருட்டு வழிகாட்டிகள்,*
- *முட்டாள்கள்,*
- *கொள்ளையர்கள்,*
- *சுய விருப்பம் கொண்டவர்கள்,*
- *வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள்,*
- *மாயத்தனம் நிறைந்தது,*
- *சட்டத்திற்கு புறம்பாக,*
- *சர்ப்பம்,*
- *விரியன்பாம்பு,*
- *துன்பப்படுத்துகிறவர்கள் மற்றும்*

- ➢ *தேவனுடைய மக்களை கொலை செய்பவர்கள்.*

*அவர் முழுமையான சுய கட்டுப்பாடோடு ஒவ்வொரு அசையையும் (syllable) கடுமையான உக்கிரத்தோடு உச்சரித்தார். அது இடியையும் மின்னலையையும் போன்றதாக இருந்திருக்கும். இயேசு பூமியில் இருந்தபோது கூறிய மிகவும் பயமானதும் பயங்கரமானதுமான அறிக்கைகள்.*

*இயேசு நீதிக்குரிய விஷயங்களில் கெட்டுப்போய் இருந்த மதத் தலைவர்களின் மீது சாபங்களை உச்சரிப்பதில் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்க்கதரிசிகளின் உதாரணத்தை பின்பற்றினார். நம்முடைய வேதாகமத்தில்* ***ஏசாயா 5:8-23*** *இல் ஆறு சாபங்களும் (woes)* ***ஆபகூக் 2:6-20*** *இல் ஐந்து சாபங்களும் (woes) இருப்பதைக் காணலாம்.*

## *ஏழு சாபங்களின் (woe's) பட்டியல்*

### *1. மற்ற மக்கள் இரட்சிக்கப்படுவதை கடினமாக்குவதற்காக (v. 13)*

*பரிசேயர்கள் எப்போதும் அணிவகுப்பை வழிநடத்தி முன்னிலையில் இருக்க விரும்புவதை இயேசு விமர்சித்தார். ஆனாலும் மக்களின் புகழை பெற விரும்புவதால், அவர்கள் மக்களை பரலோகத்தின் வாசலுக்கு அழைத்துச் சென்றது போல அணிவகுத்து செல்வார்கள். அவர்களும் உள்ளே போக மாட்டார்கள் மேலும் மக்களையும் தேவபிரசனத்திற்குள்ளே செல்ல விடமாட்டார்கள்.*

இயேசு அவர்களை செல்ல அனுமதிக்காததற்கு கண்டித்தது மட்டுமல்லாமல் மேலும் பரிசேயர்கள் இல்லாமல் இருந்திருந்தால், மக்கள் தங்களுடைய இரட்சிப்பை பெற்றிப்பார்கள்.

நம்முடைய நாட்களில் மக்கள் பரலோகம் மற்றும் தேவனை குறித்தும் நிறைய கதைகளை கூறுகின்றனர். ஆனால் அவர்களுடைய வாழ்வு முற்றிலும் பொய்யாலானது.

## *2. மாறியவர்களை கெடுப்பதற்காக (v. 15)*

பரிசேயர்கள் தாங்களும் இராஜ்யத்திற்குள் பிரவேசிக் மாட்டார்கள் மற்றவர்களையும் பிரவேசிக்க விடமாட்டார்கள். மேலும் அவர்களை தப்பான போதனைகளுக்கு உட்படுத்தி அவர்களை கெடுத்து விடுவர். அவர்கள் இதை செய்யவதற்கு பரந்த தூரமான இடங்களுக்கும் பயணிப்பர். கலாத்து பட்டணத்திலுள்ள புதிய விசுவாசிகளை கெடுப்பதற்காக பவுலை எதிர்த்த யூதர்கள் மிகவும் தொலைவில் இருக்கும் பட்டணத்திற்கு சென்றனர்.

## *3. முரட்டுத்தனமான மதத்திற்காக (v. 16-22)*

பிரதானமாக வழக்கறிஞர்கள் எவ்வாறு சட்டபூர்வமாக பிணைக்கப்பட்ட மற்றும் பிணைக்கப்படாத சத்தியங்களை வேறுபடுத்தும் முறையை அறிந்திருப்பார்களோ அவ்வாறே இயேசுவும் மற்ற நேரங்களில் மற்ற இடங்களில் பேசிய உதாரணங்களை பயன்படுத்தினார்.

அவர்களை பொருத்தமட்டில் தேவனுடைய நாமத்தில் எடுக்கப்பட்ட சத்தியங்களே பிணைக்கப்பட்டது. ஆனால் யூதர்கள் தேவனின் நாமத்தை தங்களுடைய பேச்சில் பயன்படுத்துவதில்லை. ஆனால் மாறாக அதற்கு ஒத்த வார்த்தைகளாகிய "பரலோகம்" அல்லது "கோவில்" அல்லது தேவனின் "சிங்காசனம்" போன்றவற்றை பயன்படுத்தினர். இந்த குறிப்பிட்ட சத்தியம் தேவனின் பெயரில் எடுக்கப்பட்டுள்ளதா இல்லலையா என்பது விவாதத்துக்குரிய விஷயமானது.

யூதர்கள் கூறுவார்கள் கோவிலை வைத்து சத்தியம் செய்தால் அது மதிப்பில்லாதது என்றும் ஆனால் கோவிலுடைய தங்கத்தைக் கொண்டு சத்தியம் செய்தால் அது மதிப்புடையது என்றும் கூறுவார்.

பலிபீடத்தை வைத்து சத்தியம் செய்தால் அது முக்கியமற்றது ஆனால் அந்த பலிபீடத்தில் வைக்கப்பட்டுள்ள காணிக்கைகளின் மீது எடுக்கப்படும் சத்தியத்தை கணக்கில் கொள்ளலாம்.

### 4. **உண்மையில் என்ன முக்கியமோ அதை புறக்கணிப்பதற்காக (v. 23-24)**

பரிசேயர்கள் தசமபாகத்தை கையாளும் முறை. தானியம், திராட்சரசம், எண்ணெய் மற்றும் ஆட்டுக்கடாவின் முதற்பேறான யாவற்றையும் தசமபாகம் கொடுக்க வேண்டும் என்பது சட்டமாகும் (உபாகமம் 14:22-29). லேவியராகமம் 27:30 இல் மரத்தில் இருந்து கிடைக்கும் கனியையும்

*குறிப்பிட்டுள்ளது. ஆனால் பரிசேயர்கள் இந்த பட்டியலை விரிவு செய்து வீட்டில் உள்ள நறுமனப்பொருள்களாகிய புதினா, வெந்தயம் மற்றும் சீரகத்தின் தசமபாகத்தையும் இதில் சேர்த்துக்கொண்டனர். இவைகளை வீட்டு நிலப்பரப்பில் சிறிய அளவில் வளர்த்து வந்தனர்.*

*அவர்களுடைய முட்டாள்தனமான சிந்தனையே இயேசுவின் குற்றச்சாட்டு. அவர்கள் நறுமனப்பொருள்களையும் தசமபாகமக கொடுப்பதை தவறு என்று அவர் கூறவில்லை. அதற்கு மாறாக, அவர்கள் அத்தகைய தசமபாக முறையை கவனியாதிருக்கக்கூடாது (v. 23). எனினும் இதில் தவறு என்னவென்றால் இந்த சிறிய காரியங்களில் அவர்கள் மிகுந்த அக்கறை செலுத்தி வந்தனர். ஆனால் பெரிய காரியங்களான "நீதி, கனிவு மற்றும் நம்பிக்கையில்" தெளிவற்ற நிலையில் இருந்தனர்.*

## *5. சுய விருப்பம் உடையவர்களாக இருப்பதற்காக (v. 25-26)*

*பரிசேயர்கள் கோஷர் (kosher) சமயலறை வைப்பதைக் குறித்து விவாதம் செய்தனர். மேலும் அதற்காக அவர்கள் திட்டமிட்ட விதிகள் அதிகமாகவும் சிக்கலானதாகவும் இருந்தன. "பாத்திரத்திற்குள் உள்ள உணவு அல்லது பானத்தை திருடியோ அல்லது ஏமாற்றியோ பெற்றிருக்கக் கூடும். அது ஆடம்பரமாகவோ அல்லது பெருந்தினீயாகவோ இருக்கலாம். ஆனால் அதை விட்டுவிட்டு பாத்திரத்தை சடங்கு முறையின்படி சுத்தமாக வைத்திருக்கும் முறையை குறித்து அதிக அக்கறை காட்டினார்கள். அது அவசியமற்றது".*

*சபைகளுக்கு செல்லும் பலருக்கு இந்த மனப்பான்மை உள்ளது. சபைகளுக்கு செல்லும் வரைக்கும் தங்கள் தோற்றத்தை வைத்துக்கொள்வது, வேத வழக்கு மொழிகளில் பேசுவது, ஒரு சிறிதளவு தம்முடைய பணத்தை தொண்டு நிறுவனங்களுக்கு அளிப்பது மேலும் குடிமகனான நம்முடைய கடமையை செய்வது போன்றவைகளில் கவனம் செலுத்துவார்கள். நம்முடைய வணிக அலுவலில் நேர்மையற்ற முறையில் இருந்தாலோ, பண விஷயங்களில் பேராசையாகவோ, குடும்பத்திற்குள் கொடுமையான முறையில் செயல்பட்டாலோ, சுயநலமாகவோ, செருக்குடனோ அல்லது கர்வத்துடனோ இருந்தால் என்ன பிரயோஜனம்.*

## *6. உள்ளே துன்மார்க்கமாக இருப்பதற்காக (v. 27-28)*

*இது ஒரு பஸ்கா வாரம். முந்தய அடார் (Adar) மாதத்தை கல்லறைகளுக்கு வெள்ளை அடித்து புதுபிப்பதற்கு பயன்படுத்துவது யூத வழக்கமாகும். அது பார்க்க அழகாக இருக்க வேண்டும் என்பதே அவர்கள் அதற்கு சாயம் பூசுவதன் நோக்கமாகும். மத ஈடுபாடு கொண்ட இந்த மக்கள் பஸ்காவிற்காக எருசலேமுக்கு செல்லும் போது தவறுதலாகக்கூட இந்த கல்லறைகளை தொட்டு தங்களை தீட்டு படுத்திவிடக்கூடது. அவர்கள் இறந்தவர்களின் உடலை புதைத்து வைக்கப்பட்டிருக்கும் இடம் அல்லது கல்லறையை தொட்டுவிட்டால் அது அவர்களை அசுத்தமாக்கிவிடும்.*

*இங்கு இயேசு பரிசேயர்களை முதலில் தங்கள் போலித்தனத்திற்காக, அதாவது வெளியில்*

*வெள்ளையடிக்கப்பட்டவர்களாய் உள்ளே கெடுதல் செய்பவர்களாய் இருப்பதற்காக விமர்சிக்கிறார். உள்ளுக்குள்ளே ஆழமாக தங்கள் வாழ்வில் மாசுபடிந்ததைக் குறித்து கவலைகொள்ளாமல் வெளியரங்கமாக சடங்குகள் மூலம் களங்கத்தில் இருந்து சுத்திகரிப்பதைக் குறித்தே அவர்களுடைய பயம் இருந்தது.*

### *7.* தேவனுடைய தீர்க்கதரிசிகளை கொலை செய்ததற்காக *(v, 29-36)*

*பரிசேயர்களே தங்கள் மூதாதையர்களின் உண்மையான பிள்ளைகள். இவர்களே தங்களிடம் அனுப்பப்பட்ட தேவனின் தீர்க்கதரிசிகளை கொலை செய்தவர்கள். ஆதியாகமம் முதல் அதிகாரங்களில் உள்ள ஆபேலில் தொடக்கி எபிரேய வேதாகமத்தின் இறுதி புத்தகமான 2 நாளாகமம் 24:21இல் குறிப்பிட்டுள்ள சகரியாவின் கொலை வரை உள்ள அனைத்து நீதிமான்களையும் இவர்களின் தந்தைகளே கொலை செய்தனர். பொல்லாத சபை மக்கள் எப்போதும் நீதிமான்களை கொலை செய்வர்.*

## இயேசுவின் அழுகை

**மத்தேயு** *23:37-39, [37] எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும்வண்ணமாக நான் எத்தனைதரமோ உன்*

பிள்ளைகளைக் கூட்டிச்சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று. [38] இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும். [39] கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும் இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.!’”

இயேசு எவ்வளவு கோபப்பட்டிருப்பார் என்பதை எண்ணிப் பாருங்கள். எழுதப்பட்டுள்ள எழுத்துக்கள் அந்த உணர்ச்சிகளை நமக்கு வெளிப்படுத்தாமல் இருக்கலாம். ஆனால் மேற்கூறிய இந்த வார்த்தைகளை இயேசு பேசிய போது உள்ள வலியை நம்மால் உணர முடியும்.

இந்த வசனங்களில் இருந்து மூன்று குறிப்புகள்.

| *V 37* | *V 37* | *V 38* | *V 39* |
|---|---|---|---|
| **நோக்கம்**<br><br>***Purpose*** | **திரும்புதல்**<br><br>***Turned away*** | **சோகம்**<br><br>***Tragedy*** | **வெற்றி**<br><br>***Triumph*** |
| ஒன்று சேர்க்க வந்தார் | விருப்பமற்ற / நிராகரிப்பு | உயிரற்ற | சேர்ந்து பாடுதல் |

## ஒன்று சேர்ந்து

ஒரு கோழி எவ்வாறு தனது குஞ்சுகளை தன் சிறகின் கீழ் ஒன்று சேர்க்குமோ அது போலவே இயேசுவும் இஸ்ரவேலர்களை ஒன்று சேர்க்கவே வந்தார். பாதுகாப்பு, அன்பு, கவனிப்பு மற்றும் அனைத்தும் அவர் தன் குழந்தைகளுக்கு தேவை என்று எண்ணினார்.

## விருப்பத்துடன் நிராகரிப்பு

வேண்டுமென்றே திரும்பிச் செல்வதை ஒரு விநாடி சற்று சிந்தித்து பாருங்கள். ஒரு கழுகு சிறு குஞ்சை எடுத்துச் செல்ல வருகிறது. கோழி அந்த குஞ்சை ஒன்று சேர்க்க வருகிறது. ஆனால், அந்த குஞ்சு அந்த கோழியிடம் வர மறுத்ததுமல்லாமல் மாறாக அந்த பறவையிடம் சென்று ஆபத்தில் சிக்கி இரையாகிவிடுகிறது. மறுத்தல் மற்றும் வேண்டுமென்றே திரும்பிச் செல்வது.

## சோகம்

அவர்களுடைய வீடு பாழடைந்து விடும். அந்த ஒப்புமையிலேயே அந்த குஞ்சு எதிரியிடம் ஓடி கொலை செய்யப்படுவதை அந்த கோழி வேறுவழியில்லாமல் அங்கு நின்று பார்ப்பது அதற்கு எவ்வளவு வலியை அது தந்திருக்கும். இந்த காரணத்தினால் தான் இயேசு எருசலேமுக்காக அழுதார்.

## வெற்றி

கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று அனைவரும் பாடும் நாள்

*வரும். இயேசு அந்த மகிமையான நாளைக் கண்டு அந்த கணத்திலும் களிகூருவார்.*

## ஒலிவேட் சொற்பொழிவு (**Olivet Discourse**)

*பிறகு இயேசு தன் சீஷர்களிடம் இறுதி காலம் அல்லது தன் இரண்டாம் வருகையைக் குறித்து பேசினார்.*

*பலரும் இந்த கணிப்பை, தேவன் கணித்து கி.பி. 70 இல் நடந்ததோடு தவறாக புரிந்துகொண்டனர்.*

*ஆனால் இந்த அதிகாரத்தை கவனமாக பாருங்கள். இயேசு கணித்தது அது அல்ல என்பதை நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.*

*இயேசு எருசலேமைக் குறித்து அழுத பின் தேவாலயத்துக்கு வந்தனர்.*

***மத்தேயு** 24:1-2, [1]இயேசு தேவாலயத்தை விட்டுப் புறப்பட்டுப்போகையில், அவருடைய சீஷர்கள் தேவாலயத்தின் கட்டடங்களை அவருக்குக் காண்பிக்க அவரிடத்தில் வந்தார்கள். [2]இயேசு அவர்களை நோக்கி: இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.”*

*இந்த தீர்க்கதரிசனம் தான் கி.பி. 70 இல் நிறைவேறியது. யூதர்கள் ரோம அரசாங்கத்தை கி.பி. 66 இல் எதிர்த்து கலகம் செய்தனர். அதனால் அவர்களை அழிக்க பேரரசர் ஒரு படையை அனுப்பினார். ஒரு படையணி (legion) (6,000*

*படைவீரர்கள்) வந்தனர் ஆனால் அதில் தோற்றுப்போய் தங்கள் உயிரை இழந்தனர். அதனால், நீரோ (Nero) பேரரசர் தன் தளபதி வஸ்பியன் (Vaspian) மற்றும் தன் குமாரன் டைடஸோடு (Titus), 10 படையணியை (legions), 60,000 படைவீரர்களை அனுப்பினார்.*

*இந்த படை எதிர்ப்பை வென்று தேவாலயத்திலும் நகரத்திலும் பதுங்கு குழிகளை அமைத்தனர். தேவாலயத்தின் அழிவை குறித்து இன்றும் யூதர்கள் வருடாந்திர நோன்பான திஷா பி-அவ்வில் (Tisha be-Av) புலம்புவார்கள். மேலும் எருசலேமின் வீழ்ச்சியை ரோமின் டைட்டஸ் ஆர்க்கில் (Rome's Arch of Titus) கொண்டாடுவார்கள்.*

*இயேசுவின் முதல் இரண்டு தீர்க்கதரிசன வசனங்களும் கி.பி.70இல் நிறைவேறிற்று.*

*இதற்கு பின்னர் தான் அவர்கள் ஒலிவ மலையை நோக்கி நடந்தனர். மீண்டும் அங்கு இயேசு தன் சீஷர்களிடம் ஒரு தீர்க்கதரிசனத்தை உரைத்தார்.*

*இயேசு அவர்களோடு தனிமையாக பேசினார். இதை மூன்று சுவிசேஷத்திலும் குறிப்பிட்டுள்ளதை காணலாம். பேதுரு, யாக்கோபு, யோவான் மற்றும் அந்திரேயா (Andrew) இயேசுவிசம் கேட்டனர் (மாற்கு 13:3)*

*இதை நீங்கள் மத்தேயு 23&24, மாற்கு 13 மற்றும் லூக்கா 21இல் காணலாம்.*

*நம்முடைய பாடத்திற்காக மத்தேயு சுவிசேஷத்தை பயன்படுத்தியுள்ளோம். ஏனெனில் அவர் தான் வரி வசூலிப்பவர். அவருக்கு சுருக்கெழுத்து (shorthand) தெரியும்.*

அவர் தேவனிடம் இருந்து வார்த்தைக்கு வார்த்தை எடுத்துக்கொண்டதாக வேத அறிஞர்கள் நம்புகிறார்கள்.

எனவே சீடர்கள் அவரிடம் கேட்டார்கள்.

**மத்தேயு** *24:3,* பின்பு, அவர் ஒலிவமலையின் மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள்.

எருசலேமிலும் இஸ்ரவேல் தேசத்திலுமுள்ள கோவிலின் அழிவைப்பற்றி இயேசு சொன்னபின் இந்த கேள்விகளுக்கு இயேசு பதிலளித்தார்.

இயேசு எச்சரிக்கையாக இருப்பதற்கு 4 அடையாளங்களை கொடுத்துள்ளார். இயேசு தொடர்ந்து நம்முடைய காதுகளை நம்பாமல் இந்த அடையாளங்களை உன்னிப்பாய் பார்க்குமாறு கூறியுள்ளார்.

1. உலகம்
2. சபை
3. இஸ்ரவேல்
4. வானம்

**மத்தேயு** *24:6-8,* [6]யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே; ஆனாலும் முடிவு உடனே வராது. [7]ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்;

பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். [8]இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்.

1. உலகம்

அ) யுத்தம்

ஆ) பஞ்சம்

இ) பூமியதிர்ச்சி

## அ) யுத்தங்களையும் யுத்தங்களை பற்றிய வதந்திகளும்

இன்றுவரை (ஏப்ரல் 2018) 15 யுத்தங்கள் வெவ்வேறு நாடுகளில் நடந்து கொண்டு இருக்கிறது.

| **தர எண் (Rank)** | **நாடு (Country)** | **மோதலில் தொடர்புடைய இறப்புக்கள்** |
|---|---|---|
| 1 | சிரியா (Syria) | 49,742 |
| 2 | ஈராக் (Iraq) | 23,898 |
| 3 | ஆப்கானிஸ்தான் (Afghanistan) | 23,539 |
| 4 | மெக்சிகோ (Mexico) | 12,224 |

| | | |
|---|---|---|
| *5* | சோமாலியா *(Somalia)* | *5,575* |
| *6* | நைஜீரியா *(Nigeria)* | *4,684* |
| *7* | சூடான் *(Sudan)* | *3,891* |
| *8* | கிழக்கு சூடான் *(South Sudan)* | *3,544* |
| *9* | லிபியா *(Libya)* | *2,865* |
| *10* | பாகிஸ்தான் *(Pakistan)* | *1,803* |
| *11* | எகிப்த்து *(Egypt)* | *1,707* |
| *12* | காங்கோ ஜனநாயக குடியரசு *(Democratic Republic of the Congo)* | *1,565* |
| *13* | ஏமன் *(Yemen)* | *1,375* |
| *14* | எதியோப்பியா *(Ethiopia)* | *1,114* |
| *15* | யுக்ரேன் *(Ukraine)* | *902* |

இந்த வார்த்தையை இயேசு கூறியதில் இருந்து ஆயிரத்திற்கும் மேற்ப்பட்ட போர்கள் பல தேசங்களில் நடைபெற்று விட்டன. *156* நாடுகளில் வெறும் *14* நாடுகளில் தான் எந்த ஒரு மோதலும் இல்லாமல் இருக்கிறது.

## ஆ) பஞ்சம்

*உலக பசி குறியீட்டை (World Hunger Index (GHI)) சற்று பார்த்தால், உலகம் முழுவதிலும் உள்ள பசியின் நிலையை கண்டு நீங்கள் அதிர்ச்சியடைந்து விடுவீர்கள். ஏறக்குறைய மூன்றில் ஒருவருக்கு ஒரு நாளில் இரண்டு வேளை உணவு கூட கிடைப்பதில்லை.*

## இ) பூமியதிர்ச்சி

*நாம் மிகவும் அதிகமான பூமி அதிர்வுகளை அனுபவித்துள்ளோம். கடந்த 100 ஆண்டுகளில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட 5.4க்கும் மேலான அளவையுடைய வலிமை வாய்ந்த நில அதிர்வுகள் நம்மிடையே வந்துள்ளது.*

*அதனால், இது மிகவும் மெதுவாக முழுமையடைவதை நாம் காணலாம்.*

## *2.* சபை

***மத்தேயு 24:9-14,*** *9. அப்பொழுது, உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலைசெய்வார்கள்; என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள். 10. அப்பொழுது, அநேகர் இடறலடைந்து, ஒருவரையொருவர் காட்டிக்கொடுத்து, ஒருவரையொருவர் பகைப்பார்கள். 11. அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள். 12. அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம். 13. முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான். 14. ராஜ்யத்தினுடைய*

*இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்.*

### *அ) உலகளாவிய துன்புறுத்தல்*

*கிறிஸ்தவருக்கு எதிரான துன்புறுத்தல் "வரலாற்றில் எந்த நேரத்தையும் விட மோசமாக உள்ளது". மேலும் மனிதநேயத்திற்கு எதிராக இனப்படுகொலையும் மற்றும் பல குற்றங்களும் நிகழ்வதைக் காணலாம். "இப்போது தேசங்கள் மற்றும் பிற பகுதிகளில் உள்ள சபைகள் ஒன்றுமில்லமால் முழுமையாக அழியக்கூடிய நிலையை எதிர்நோக்கி உள்ளது" என்று தேவையில் உள்ள சபைக்கான உதவி (Aid to the Church in Need) என்ற செய்தி அறிக்கையில் குறிபிடப்பட்டுள்ளது.*

*21ஆம் நூற்றாண்டில் கிட்டத்தட்ட 100,000 மக்கள் ஒவ்வொரு ஆண்டும் தேவனாகிய இயேசு கிறிஸ்துவின் மீது கொண்ட விசிவாசத்திற்காக இறக்கின்றனர். கடந்த 19 நூற்றாண்டுகளில் நடந்த இறப்பைக் கூட்டினால் வரும் தொகையைக்காட்டிலும் அதிகமான மக்கள் இந்த 20 ஆம் நூற்றாண்டில் இறந்துள்ளனர்.*

### *ஆ) விசுவாசிகளின் வீழ்ச்சி*

*நிறைய பொய் பிரசங்கங்கள் மக்களை திசைதிருப்ப வந்துவிட்டன. இது மெல்ல உயர்ந்து கொண்டு வருகிறது. சபைகளில் நடக்கும் பல காரியங்ககளாலும் கோட்பாடுகளாலும் பலரும் தேவனை விட்டு விலகி நடக்கின்றனர்.*

## இ) அனைத்து தேசங்களுக்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட வேண்டும்

*உலகில் 3000 லட்சத்திற்கும் மேற்பட்ட இனங்கள் உள்ளன. ஆனால் அவைகள் எல்லாவற்றிற்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படவில்லை. ஆனால் நிச்சயமாக, நாம் நினைப்பதற்கும் மேலான பல இடங்களுக்கு கடந்த பத்தாண்டுகளில் அது சென்றுள்ளது. கிறிஸ்துவிற்காக சீனா சந்திக்கப்பட்ட காரியம் மிகவும் ஆச்சரியத்திற்குரியது. சீனாவில் ஏறத்தாழ 12,000 மக்கள் ஒவ்வொரு வாரமும் ஞானஸ்நானம் பெறுகிறார்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது.*

## *3.* இஸ்ரவேல்

***மத்தேயு 24:15-28,*** *15. மேலும், பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே. வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன். நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது, 16. யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள். 17. வீட்டின்மேல் இருக்கிறவன் தன் வீட்டிலே எதையாகிலும் எடுப்பதற்கு இறங்காதிருக்கக்கடவன். 18. வயலில் இருக்கிறவன் தன் வஸ்திரங்களை எடுப்பதற்குத் திரும்பாதிருக்கக்கடவன். 19. அந்நாட்களிலே கர்ப்ப வதிகளுக்கும் பால்கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ. 20. நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலாவது ஓய்வுநாளிலாவது, சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள். 21. ஏனெனில், உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம்*

*அப்பொழுது உண்டாயிருக்கும். 22. அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப் போவதில்லை; தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும். 23. அப்பொழுது, இதோ கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள். 24. ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். 25. இதோ, முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன். 26. ஆகையால்: அதோ, வனாந்தரத்தில் இருக்கிறார் என்று சொல்வார்களானால் புறப்படாதிருங்கள்; இதோ, அறைவீட்டிற்குள் இருக்கிறார் என்று சொல்வார்களானால் நம்பாதிருங்கள். 27. மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும். 28. பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும்.*

### *அ) வெறுக்கத்தக்க அழிவு*

*இங்கு இயேசு தானியேலின் 9 ஆம் அதிகாரத்தின் ஒரு பதத்தை (AbominationDesolation) மேற்கோளாய் காட்டுகிறார். இதை நாம் அடுத்த பாடத்தில் காணலாம். அப்போது இது நடந்த பிறகு எவ்வாறு அனைத்தும் ஆரம்பிக்கும் என்பதை நாம் அறிந்துகொள்வோம்.*

*ஆ) அந்திகிறிஸ்து – சட்ட திட்டம் அற்றவன்*

*இ) பொய்யான கிறிஸ்து / தீர்க்கதரிசிகள்*

## *4.* **வானம்**

***மத்தேயு 24:29,*** *அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக்கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்.*

*அ) சூரியன்*

*ஆ) சந்திரன்*

*இ) நட்சத்திரம்*

*மேலே உள்ள பட்டியலில் கூறப்படாத வேறு சில விஷயங்களும் உள்ளன. அவைகளும் நடந்த பிறகே நம்முடைய கர்த்தராகிய இயேசு திரும்பி வருவார் என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். ஆனால் ரகசிய வருகை (rapture) எப்பொழுது வேண்டுமானாலும் நிகழலாம். மேலும் ரகசிய வருகை (rapture) நடைபெற்ற உடனே இரண்டாம் வருகையின் 7 வருட உபத்திரவங்களுக்கான கடிகாரம் ஆரம்பமாகிவிடும்.*

## *வெளிப்படுத்தல் 6 மற்றும் மத்தேயு 24 ஆகியவற்றின் விரிவான தோற்றம் (*Comprehensive look of Revelation 6 and Matthew 24)

## *முதல் முத்திரை: பொய்யான அமைதி*
## First seal: False Peace

*அந்திகிறிஸ்து வரும் போது அவன் பொய்யான அமைதிக்குள் மக்களை வழி நடத்துவான். ஏழு ஆண்டு காலம் முதல் பாதியில் சமாதானத்துடன் தொடங்கும். இரண்டாம் பாதியில் பெரும் உபத்திரவம் ஆரம்பமாகிவிடும்.*

***மத்தேயு* 24:4-5,** *இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்;*
5. *ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்.*

*இயேசு கிறிஸ்து பரலோகத்தில் முதல் முத்திரை திறக்கிறார். சுருள் திறக்க தகுதியுள்ள ஒருவர் இயேசு கிறிஸ்து (வெளிப்படுத்துதல்* 5: 5-10)

***வெளிப்படுத்தல்* 6:2**, *நான் பார்த்தபோது, இதோ, ஒரு வெள்ளைக்குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவன் வில்லைப் பிடித்திருந்தான்; அவனுக்கு ஒரு கிரீடங் கொடுக்கப்பட்டது; அவன் ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான்.*

## *இரண்டாவது முத்திரை: போர்*
## **Second seal: War**

***மத்தேயு* 24:6-8,** *யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே; ஆனாலும் முடிவு உடனே வராது·*
*7. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்.*
*8. இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்.*

*தேவன் இந்த மகா உபத்திரவத்தை அனுமதித்தார். இது தேவனுடைய உக்கிரமான நியாயத்தீர்ப்பு. இந்த காலத்தை அறிந்து கொள்ள **தானியேல்11:36-40** வாசிக்கவும்*

***வெளிப்படுத்தல்* 6:4,** *அப்பொழுது சிவப்பான வேறொரு குதிரை புறப்பட்டது; அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு, பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலைசெய்யத்தக்கதாகச் சமாதானத்தைப் பூமியிலிருந்தெடுத்துப்போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது; ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது.*

## *மூன்றாவது முத்திரை: பஞ்சம்*
## **Third seal: Famine**

***மத்தேயு* 24:7**
*7. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும்,*

*கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்.*

*கருப்பு குதிரை என்பது பஞ்சத்தோடு தொடர்புடையது (புலம்பல்* 5: 8-10)

**வெளிப்படுத்தல் 6:5-6,** [5]. *அவர் மூன்றாம் முத்திரையை உடைத்தபோது, மூன்றாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லக்கேட்டேன். நான் பார்த்தபோது, இதோ, ஒரு கறுப்புக்குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவன் ஒரு தராசைத் தன் கையிலே பிடித்திருந்தான்.* [6]. *அப்பொழுது, ஒரு பணத்துக்கு ஒருபடி கோதுமையென்றும், ஒரு பணத்துக்கு மூன்றுபடி வாற்கோதுமையென்றும், எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே என்றும், நான்கு ஜீவன்களின் மத்தியிலிருந்து உண்டான சத்தத்தைக் கேட்டேன்.*

The rider has the scale with him. There will be rationing. *சவாரி செய்துவருவபன் கைகளில் அளவுகோலுடன் வருகின்றான்.*

*ஒரு குவார்ட்டர் கோதுமை = ஒரு நாளுக்கு ஒரு நபருக்கு உணவு = ஒரு நாள் ஊதியம் = ஒரு நாணயம்*

*ஒரு குவார்ட் பார்லி = ஒரு நாளுக்கு மூன்று நபர்கள் உணவு = ஒரு நாள் சம்பளம் = ஒரு நாணயம் = விலங்கு உணவு*

## *நான்காவது முத்திரை: மரணம்*

## Fourth seal: Death

*மனிதர்களில் நான்கில் ஒரு பகுதியினர் கொல்லப்படுவார்கள்.*

### *மத்தேயு* 24:6-8

*கொள்ளைநோயால் பலர் இறந்துவிடுவார்கள்.*

**வெளிப்படுத்தல் 6:7-8,** 7. *அவர் நாலாம் முத்திரையை உடைத்தபோது, நாலாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லுஞ் சத்தத்தைக் கேட்டேன்.* 8. *நான் பார்த்தபோது, இதோ, மங்கினநிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர்; பாதாளம் அவன்பின் சென்றது. பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்டமிருகங்களினாலும், பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலைசெய்யும்படியான அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது.*

*மக்களைக் கொல்லக்கூடிய கொடிய விலங்குகளை நீங்கள் கற்பனை செய்ய முடியுமா?*

*எலி!*

14 *ஆம் நூற்றாண்டில் எலி ஐரோப்பாவில் ¼ நபர்களைக் கொன்றது. நீங்கள் எலிகளை* 95% *அழித்தால், ஒரு வருடத்திற்குள் அசல் நிலைக்கு தங்களைத் தாங்களே இனப்பெருக்கம் செய்யும் திறனைக் கொண்டுள்ளது.*

*ஒரு நேரத்தில், எலி* 35 *நோய்களைக் கொண்டு செல்ல முடியும்.*

## *ஐந்தாவது முத்திரை: பழிவாங்குதல்*
## Fifth seal: Vengeance

***மத்தேயு* 24:9-10,** *அப்பொழுது, உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலைசெய்வார்கள்; என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள்.* [10]. *அப்பொழுது, அநேகர் இடறலடைந்து, ஒருவரையொருவர் காட்டிக்கொடுத்து, ஒருவரையொருவர் பகைப்பார்கள்.*

*பரிசுத்தவான்கள் சபையில் உள்ளவர்கள் அல்ல. மாறாக இவர்கள் ரகசிய வருகைக்குபின் ரட்சிக்கப்பட்ட சீஷர்கள். உபத்திரவம் நடக்கும்போது, இரட்சிக்கப்படுவார்கள்.*

1,44,000 *பேர் நற்செய்தியை* (*வெளிப்படுத்துதல்* 7: 1-8) *பிரசங்கிப்பார்கள், எதிர்காலத்தில் அவர்கள் யார் என்பதை நாம் பார்க்கலாம்.*

*இந்த இரண்டு சாட்சிகளும் உபத்திரவத்தின்போது பிரசங்கிப்பார்கள்* (*வெளிப்படுத்துதல்* 11) *எதிர்கால பாடத்தில் இரண்டு சாட்சிகள் யார் என்பதை நாம் பார்க்கலாம்.*

*வெளிப்படுத்துதல்* 14 *ல் தேவதூதர்கள் பிரசங்கிப்பார்கள்.*

**வெளிப்படுத்தல் 6:9-11,** [9]. *அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின்கீழே கண்டேன்.* [10]. *அவர்கள்:*

*பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். [11]. அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது; அன்றியும், அவர்கள் தங்களைப்போலக் கொலைசெய்யப்படப்போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரையும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது.*

## ஆறாவது முத்திரை: பரலோக அடையாளங்கள் / பயம் Sixth seal: Heavenly signs/ Fear

**மத்தேயு 24:29-30,** *அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக்கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். [30]. அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்.*

*சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் அணைக்கப்படும். அப்பொழுது தேவனுடைய குமாரன் காணப்படுவார்.*

**வெளிப்படுத்தல் 6:12-14,** [12.] *அவர் ஆறாம் முத்திரையை உடைக்கக்கண்டேன்; இதோ, பூமி மிகவும் அதிர்ந்தது; சூரியன் கறுப்புக் கம்பளியைப்போலக் கறுத்தது; சந்திரன்*

*இரத்தம்போலாயிற்று. [13.] அத்திமரமானது பெருங்காற்றினால் அசைக்கப்படும்போது, அதின் காய்கள் உதிருகிறதுபோல, வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது. [14.] வானமும் சுருட்டப்பட்ட புஸ்தகம்போலாகி விலகிப்போயிற்று; மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களைவிட்டு அகன்றுபோயின.*

*அப்போஸ்தலனாகிய யோவானுக்கு தரிசனத்தில் விவரித்தது, ஒலிவ மலையின் பிரசங்கத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பேசியதை மேலே நாம் காணலாம்.*

*கடைசியில், மத்தேயு 13-ல் உள்ள உவமைகளில் கடைசி நாட்களைப்பற்றி இயேசு குறிப்பிட்டார் என்பதை நினைவில் வையுங்கள்.*

***மத்தேயு 13:39,** அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு; அறுப்பு உலகத்தின் முடிவு; அறுக்கிறவர்கள் தேவதூதர்கள்.*

***மத்தேயு 13:49,** இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவதூதர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து,*

*நம்மை எடுத்துக்கொண்டு செல்ல கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வருகின்றார் ஆனால் கடைசி நாட்களில் தேவன் தேவதூதர்களை அனுப்பி பிரித்து எடுக்கின்றார்.*